335

மாதர் போதினி

No. 261 அக்டோபர் 1919 No. 10

LESSONS FOR EVANGELISTIC WOMEN WORKERS

சுவிசேஷப் படைமுயற்சிப் பெண் ஊழியருக்குதவியான வேதபாடங்கள்

முகவுரை

கடந்த மகாயுத்த சம்பந்தமாய் பெண்கள் புரிந்த பேருதவியைப் பற்றி அறியாதவரில்லை. பெலவீனப் பாண்டங்களென்று புறக் கணிக்கப்படும் பெண்கள் இவ்வுலகப்போரில் இவ்வாறு உதவியா யிருக்கக்கூடுமானால், யாதொரு பட்சபாதமுமின்றி இருபாலரையும் சமமாய் அழைக்கும் இயேசுவானவருடைய படையில் பேரெழு திக்கொண்ட மாதர் எத்தனை பேர்?

ஒருவனுக்குள்ள இராஜபக்தியால் போர்செய்ய விருப்பமிருந்த போதிலும், போந்த பெலனும் தகுந்த பயிற்சியு மில்லாவிடின் அவனா லாவதென்ன? அவ்வண்ணமே நமது ஆண்டவருடைய சுவிசேஷப் படையில் பெயரெழுதிக்கொண்ட நமக்கும் போருக்குவேண்டிய பெலமும் பயிற்சியும் வேண்டும். இது பரிசுத்தாவியானவருடைய பெலத்தாற் செய்யும் உண்மையான ஜெபத்தாலும் வேதப் பயிற்சி யாலுமே ஆகவேண்டியது. லூக். 24^{47-49} ல் சுவிசேஷத்தை சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கவும் சாட்சிகளாயிருக்கவும் வேண்டு மானால் உன்னதத்திலிருந்து வரும் பெலனாகிய பரிசுத்தாவியான வரைப் பெறவேண்டுமென்று இயேசுவானவர் கூறியிருக்கிறார். அவ்வண்ணமே காத்திருந்து பெற்றுக்கொண்ட சீஷர் எவ்வளவு வல்லமையாய் ஊழியஞ் செய்தார்களென்று அப்போஸ்தலர் நட படிகளில் வாசிக்கிறோம். அதோடு படைமுயற்சிக்கு வேண்டிய விசேஷ கருவியாகிய கர்த்தருடைய வசனமாகிய பட்டய அப்பி யாசம் நம்மெல்லாருக்கும் அவசியம்.

VOL. XXXIV.

பெண் ஊழியரின் ஆயத்தத்துக்கென்று இங்கு குறித்திருக்கும் சில வேதபாடங்களைப் படைமுயற்சி ஆரம்பிக்குமுன் ஸ்திரீகள் ஒருங்குசேர்ந்து ஆவியானவருடைய உதவியால் படித்தார்களானல் நமது படைமுயற்சி ஊழியம் வல்லமையுள்ளதாயிருக்க அனுகூலமாயிருக்கும். பெண்களுக்கு விசேஷ உதவியாயிருக்கும்படி வேதத்திலுள்ள பெண்கள் ஜீவியத்திலிருந்து இந்தப் பாடங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

முதலாவது, மரியாளைப்போல இயேசுவின் பாதத்திலிருந்து நாம் கற்கவேண்டியதென்றும், அவ்வண்ணங் கற்கும்போது கிறிஸ்துவின் மட்டற்ற அன்பையும் அவரால் இலவசமாய்க் கிடைக்கும் பாவமன்னிப்பாகிய ஈவையும் அறிந்து நன்றியறிதலாலும் அன்பாலும் நமது இருதயம் பொங்கி அவருக்கு மரியாளைப் போல் பாதாபிஷேகஞ் செய்ய ஏவப்படுவோமென்றும், இவ்விதமாய் நமது இருதயம் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டால் அவருடைய தரிசனம் மரியாளுக்குக் கிடைத்த மாதிரி நமக்குக் கிடைக்குமென்றும், பின் நாம் எஸ்தரைப்போல் பிறருக்காகப் பரிந்துபேசி ஜெபிப்பதாலும், சமாரியா ஸ்திரீயைப்போல் இயேசுவைப்பற்றி சாட்சி சொல்லிப் பிரசங்கிப்பதாலும், தொற்காளைப் போல் நற்கிரியைகளைப் பிறர் நன்மைக்கென்று செய்வதாலும், கிறிஸ்துவின் நாம மகிமைக்கேற்ற ஊழியஞ் செய்யலாமென்று இப்பாடங்களால் அறியலாம்.

MARY AT THE FEET OF JESUS

I. இயேசுவின் பாதக்கல்வி—மரியாள்

	பாடம்	தங்க வசனம்
(1)	மத். 11^{29}	11^{29} என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்.
(2)	லூக். 11^{1-13}	11^{1} எங்களுக்கு ஜெபம் பண்ணப் போதிக்கவேண்டும்.
(3)	மாற். 4^{1-20}_{c}	4^{9} கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.
(4)	லூக். 6^{27-28}	6^{27} எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்.
(5)	யோ. 13^{1-17}	13^{15} நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.
(6)	மத். 5^{1-16}	$5^{13,14}$ நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.

337

(7) யோ. 15[1-17] 15[9] கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவன் பிதாவையும் குமாரனையும் உடையவன்.

மரியாள் இயேசுவின் பாதத்திலுட்கார்ந்து அவரிடம் கற்றுக்கொண்டாள். 'என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்' என்று இயேசுவானவர் கூறுகிறார். நாம் வியப்போடு மதிக்கிற அநேக பரிசுத்தவான்களுடைய ஜீவியத்தின் இரகசியம் என்னவென்றால் அவர்கள் ஆண்டவர் பாதத்திலுட்கார்ந்து அவரிடம் கற்றுக்கொள்வதுதான். படிப்பறியாப் பேதைகளாகிய இவர்களுக்கு எங்கிருந்து இந்த ஞானமுண்டானது என்று சீஷரைப் பார்த்து அதிசயித்தவர்கள் இயேசுவோடிருந்ததினால் என்று அறிந்துகொண்டார்கள். மோசே தேவனால் போதிக்கப்பட்டு சீனாய் மலையிலிருந்திறங்கினபோது அவன் முகம் பிரகாசமடைந்திருந்ததாக வாசிக்கிறோம்.

ஆண்டவர் பாதக்கல்வி கற்க ஏற்றநேரம் அதிகாலை. அவர் பாதத்தில் காலைதோறும் உட்கார்ந்து கற்றுக்கொள்ளும் வாஞ்சையும் வழக்கமுமுள்ளவர்களைக் காலைதோறும் அவரே எழுப்பி, இளைத்தவருக்கேற்ற வார்த்தைசொல்ல ஞானம் தருவார். படைமுயற்சியிற் பங்கு பெற விரும்புவோருக்கு இவ்விதக் கல்விப் பயிற்சி மெத்த அவசியம்.

இயேசுவின் பாதக்கல்வியால் நமது ஜீவியம் மாறிப் புதிதும் அழகுமாகும். 'நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்' என்றவருடைய ஜீவியத்தில் காணப்பட்ட சாந்தமும் மனத்தாழ்மையுமான ஜீவியமே பேதுரு அப்போஸ்தலன் சொன்னபடி ஸ்திரீகளின் அலங்காரமாகும். இயேசுவின் போதனை எப்படியோ அப்படியே அவரது சாதனையுமிருந்ததென்று அவர் ஜீவியத்தால் அறிகிறோம். நமது ஜீவியத்தில் காணப்படாத சத்தியங்களை நாம் போதிப்பதால் என்ன பிரயோஜனம்! ஆதலால் இயேசுவின் பாதத்தில் தினந்தோறுங் கற்று ஜீவிய மாறுதலடைந்து நமது போதனையும் சாதனையும் ஒத்திருக்கப் பார்ப்போமாக.

கேள்விகள்.

1. இயேசுவினிடங் கற்றுக்கொள்ள ஏற்ற நேரம் எது?
2. தாழ்மையையும் சாந்தத்தையும் பற்றி இயேசுவின் போதனை என்ன? சாதனை என்ன?
3. இயேசுவின் பாதக்கல்வியாலாகும் பலாபலன் என்ன?

MARY'S LOVE FOR JESUS

II. இயேசுவின் பாதாபிஷேகம்—மரியாள்

பாடம்		தங்க வசனம்
(1)	லூக். 7 37-50	7[47] இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே.
(2)	மாற். 14 1-9	14[8] இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்.
(3)	யோ. 21 15-19	15[15] இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?
(4)	லூக். 17 11-19	17[15] ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு உரத்த சத்தத்தோடு தேவனை மகிமைப்படுத்தினான்.
(5)	மத். 26 6-13	26[10] என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள்.
(6)	சங். 116 1-19	116[12] கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்?
(7)	சங். 63 1-8	63[1] என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது.

மரியாளுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு அவள் இருதயம் கிறிஸ்துவின் அன்பினால் பொங்கினபோது அவர் பாதத்தைக் கண்ணீரால் நனைத்து முத்தமிட்டு தன் மிகுந்த அன்புக்கு அறிகுறியான விலையேறப்பெற்ற பரிமள தைலத்தை இயேசுவின் பாதத்தில் ஊற்றினாள். தன் ஆண்டவரையே அவள் இருதயம் பற்றிக்கொண்டபடியால் பிறர் என்ன சொல்வார்களோ வென்ற எண்ணம் அவளுக்கு வரவில்லை. நளத தைலத்தைக் குப்பியோடு அவருக்குக் கொடாமல் குப்பியை உடைத்து ஊற்றினதுபோல் நமது இருதயம் கிறிஸ்துவின் முன் நொறுங்கவேண்டும். இருதயத்தைப் பார்க்கிற ஆண்டவர் மரியாளுடைய அன்பின் பெருக்கைக் கண்டு 'இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே' என்று சொல்லுகிறார். ஆண்டவர் நமக்குச் செய்த கிருபைகளையும் இரக்கத்தையும் மீட்பையும் தியானிக்கிறோமா? உண்மையாய்த் தியானித்தால் நமது இருதயம் அன்பினால் பொங்குமே; எல்லாரிலும் அவர் நமக்கு அருமையாயிருப்பாரே. மற்றெல்லாரிலும் அதிகமாய் நீ கிறிஸ்துவை நேசிக்கிறாயா? அப்படியானால் ஆட்டுக்குட்டிகளை மேய் என்ற உத்தரவு உனக்கு வருகிறது. கிறிஸ்துவில் ஊக்கமாய் அன்புகூருகிறவர்கள் மாத்திரமே ஆத்துமாக்களை இயேசுவண்டை நடத்தக்கூடியவர்கள். அப்படிப்பட்டவர்கள் தான் படைமுயற்சிக்குத் தேவை. அன்பில்லாமல் மற்ற

நோக்கத்தோடு ஊழியஞ் செய்வோர் எவ்வளவாய்ப் பிரசங்கித்து முயற்சித்தாலும் சத்தமிடுகிற வெண்கலம்போன்றவரே. அன்பில்லா ஊழியம் செத்த ஊழியம், பயனற்றது. ஊழியத்தை ஆண்டவர் முதலில் கேட்காமல், உன் இருதயத்தை அதாவது உன் அன்பைக் கேட்கிறார். அன்பைக் கொடுத்தபின் தமக்கு ஊழியஞ்செய்ய ஏவுகிறார்.

கேள்விகள்.

1. இயேசுவுக்குப் பாதாபிஷேகஞ் செய்ய மரியாளை ஏவினதென்ன?
2. நாம் இப்போது இயேசுவானவருக்குச் செய்யத்தக்க பாதாபிஷேகமென்ன?
3. ஆண்டவர் மரியாளை உயர்வாய் மெச்சிப்பேசினதேன்?
4. அன்பின் லக்ஷணங்கள் எவை?

MARY'S VISION OF THE RISEN CHRIST

III. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் தரிசனம்—மரியாள்

	பாடம்	தங்க வசனம்
(1)	யோ. 20^{1-18}	20^{18} மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும் அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்.
(2)	யோ. 20^{19-21}	20^{21} சீஷர்கள் கர்த்தரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள்.
(3)	மத். 28^{16-20}	16^{20} இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்.
(4)	மாற். 16^{15-20}	16^{15} நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.
(5)	லூக். 24^{13-31}	24^{29} அவர் அவர்களுடனே தங்கும்படி உள்ளே போனார்.
(6)	லூக். 24^{32-49}	24^{45} வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்தார்.
(7)	யோ. 21^{1-14}	21^{7} அவர் கர்த்தர்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் தரிசனம் அவரைத் தியானித்து ஆவல் கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் கிடைத்தது. மரியாள் மிகுந்த அன்பினால் தன் ஆண்டவரைப் பற்றிக்கொண்டு அவரை எப்படியும் காணவேண்டுமென்று வாஞ்சித்ததால் முதல் தரிசனம் அவளுக்குக் கிடைத்தது. தன் ஆண்டவர்மேல் வைத்த அன்பால் எல்லாருக்கும் முந்திக்கொண்டாள். அவள் இருதய வாஞ்சையையறிந்த ஆண்டவரும் அவளைச் சந்திக்க முந்திக்கொண்டார். இது என்ன பாக்கியம்! நாம் ஆண்டவர்மேல் உண்மையான வாஞ்சை கொண்டவுடன் நம்மைச் சந்திக்க ஓடிவருகிறார். அவர்மேல் நோக்கங்கொண்ட யாவருக்கும், அறையிலோ, மலையிலோ, வழிநடக்கையிலோ தரிசனங்கொடுத்தார். தரிசனத்தில் வேதவாக்கியங்களை மனம் கொழுந்துவிட்டெரியத்தக்கதாக விளக்கினார்; வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி மனதைத் திறந்தார்; வேலையில் ஆசீர்வாதமுண்டாக்கி வலை கிழியத்தக்கதாய் ஏராளமான மீன்கள் அகப்படச்செய்தார்; சமாதான வாழ்த்துதல் கொடுத்தார்; எப்போதும் கூட இருப்பேனென்ற வாக்குக்கொடுத்தார்; பரிசுத்தாவியின் பெலனும், திருவசனத்தைத் தைரியத்தோடே சொல்லி அநேகரை சீஷராக்கும் வல்லமையுங் கொடுத்தார். இவ்வித பாக்கியங்கள் நமக்குங் கிடைக்கவேண்டுமானால் ஆண்டவருடைய தரிசனம் அவசியம். சரீரத்தில் தரிசித்த மரியாள் தம்மைத் தொடவிடவில்லை. சரீரத்தில் தரிசிக்க விரும்பின தோமாவைப் பார்த்து, காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். ஆகையால் சரீரத்தில் தரிசனங் கிடையாவிடினும், ஆவியில் தரிசனங் கண்டிப்பாய்க் கிடைக்கும். சந்தேகமேயில்லை. நமக்கு உண்மையான வாஞ்சை இருந்தால் கிறிஸ்துவின் ஆவியாகிய பரிசுத்தாவியானவரை நாம் பெற்றுக்கொள்ளலாம். அவர் எப்போதும் நம்மோடிருப்பார். நம்மொவ்வொருவரோடும் அவர் வாசமாயிருக்கக்கூடும்.

கேள்விகள்.

1. உனக்குக் கிறிஸ்துவின் தரிசனங் கிடைத்திருக்கிறதா? எப்படிப் பெற்றுக்கொண்டாய்?
2. அதினாலுண்டாகிய ஆசீர்வாதம் உன் ஜீவியத்தில் விளங்குகிறதா?
3. இயேசுவானவர் ஒவ்வொரு தரிசனத்திலுங் கொடுத்த ஆசீர்வாதங்கள் எவை?
4. இவ்வித தரிசனம் படை முயற்சி செய்வோருக்கு ஏன் அவசியம்?

THE SAMARITAN WOMAN'S WITNESS FOR CHRIST

IV. கிறிஸ்துவுக்காகச் சாட்சி—சமாரியா ஸ்திரீ

	பாடம்	தங்க வசனம்
(1)	யோ. 4^{28-30}, $^{39-42}$	4^{39} சாட்சிசொன்ன அந்த ஸ்திரீயின் வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரிலநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்.
(2)	மாற். 5^{1-20}	5^{20} இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம்பண்ணத் தொடங்கினான்.
(3)	அப். 26^{9-23}	9^{22} நான் இந்நாள்வரைக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சி கூறி வருகிறேன்.
(4)	யோ. 1^{19-37}	1^{34} நான் கண்டு இவரே தேவனுடைய குமாரனென்று சாட்சிகொடுத்து வருகிறேன்.
(5)	அப். 4^{1-21}, $^{31-33}$	4^{20} நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துப் பேசாமலிருக்கக் கூடாதே.
(6)	லூக். 8^{26-39}	8^{39} நீ உன் வீட்டுக்குப் போய் தேவன் உனக்குச் செய்தவைகளையெல்லாம் அறிவி.
(7)	1^{1-18}	1^{7} அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக்குறித்து சாட்சிகொடுக்க சாட்சியாக வந்தான்.

கிறிஸ்துவைப்பற்றி நமக்கிருக்கும் அனுபவத்தைப் பிறருக்குச் சொல்வது சாட்சி. கிறிஸ்துவின் அன்பையும், அவரால் கிடைக்கும் பாவமன்னிப்பையும், பாவத்தினின்று விடுதலையையும் அனுபவித்தறியாதவர் சாட்சிகொடுப்பதெப்படி? பிறவிக்குருடன் கண் திறக்கப்பட்டதால் சாட்சி கொடுத்தான். இயேசுவானவரால் லேகியோனென பிசாசுகள் நீங்கப்பெற்றவன், அவர் செய்தவைகளைத் தன் நாட்டில் பிரசித்தப்படுத்தினான். பவுல் அப்போஸ்தலன் தன்னை ஆண்டவர் குணப்படுத்தினதைப்பற்றி சாட்சிபகர்ந்தான். தன் அந்தரங்க

நிலைமையையறிந்து தனக்குத் தேவையான ஜீவத்தண்ணீரைப் பெற்றுக்கொள்ளும வகையைக் காட்டினவரைப்பற்றி சமாரியா ஸ்திரீ சாட்சிசொன்னுள். சாட்சி சொன்னவர்களெல்லாரும் உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும் அறிந்ததாகப் பார்க்கிறோம். தாங்கள் அடைந்த நன்மையை அடக்கிக்கொள்ள அவர்களால் கூடவில்லை. அவ்வண்ணமே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் சும்மாவிருக்க முடியாது. அவராலுண்டாகும் பேரின்ப பாக்கியத்தை அடக்கிக்கொள்வதெப்படி? யாராவது சாட்சி சொல்லாதிருந்தால் அவர்கள் இன்னும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லையென்பது தெளிவாயிருக்கிறது. அனுபவசாட்சியின்றி மூளையினுல்மாத்திரம் கிரகித்து கிறிஸ்துவைப் பிரசங்கித்தால் ஆகாயத்தை அடித்து சிலம்பம்பண்ணுகிறவர்கள்போல் இருப்போம். அவ்வித பிரசங்கம் எவ்வித சாதுரியமுள்ளதாயிருப்பினும் யாது பயனும் உண்டாக்காது வியர்த்தமாகும். நாம் செய்யாத காரியத்தைப் பிறர் செய்ய ஏவுவதால் பயனில்லை. அனுபவசாட்சியின்மேல் பிரசங்கம் ஏற்படவேண்டும். சாட்சி சொல்லும்போது பிரசங்கிக்க வழியுண்டாகிறது. இயேசுவானவர் எனக்கு என்னசெய்தாரென்று நானறிந்ததைப் பிறருக்கு முதலில் சொல்வேனுனல், அவர் இன்னுரென்றும் அவர் ஜீவிய விருத்தாந்தத்தையும் விளக்க அதின்மூலமாய் வழியுண்டாகிறது. சமாரியா ஸ்திரீ சாட்சிகூறி தன் ஊராருக்குத் தெருப்பிரசங்கஞ்செய்து அநேகர் கிறிஸ்துவண்டை வந்து அவரை ஏற்றுக்கொள்ளச் செய்தாளென்று பார்க்கிறோம். இயேசுவின் சீஷர் சாட்சிகூறிப் பிரசங்கித்தார்கள். நாமும் நமது அனுபவத்தைச் சாட்சியாகச் சொல்லும்போது பிரசங்கிக்க வழியும் தைரியமுமுண்டாகும். ஒவ்வொரு கிறிஸ்தவ மாதும் சாட்சிகூறவேண்டும். சாட்சிபகராதவர் கிறிஸ்தவரல்லர்.

கேள்விகள்.

1. நீ கிறிஸ்துவுக்காக சாட்சி சொன்னதுண்டா? உன் சாட்சி எப்படிப்பட்டது?
2. உன் சாட்சி கிறிஸ்துவைபபறறு அறிவிகக வழியுணடாக்கிறது?
3. கிறிஸ்துவுக்கு சாட்சிகள் யார்?
4. படைமுயற்சியில் சாட்சி ஏன் அவசியம்?

(இன்னும் வரும்.)

343

CHILDREN'S PAGE

FATHER, WILL YOU PRAY FOR ME?

அப்பா, எனக்காக ஜெபம் செய்வீரா?

அமெரிக்கா கண்டத்து இந்தியன் ஒருவனுக்கு ஜேன் என்னப்பட்ட ஒரு சிறு பெண் இருந்தாள். அவளுக்கு கொடிய வியாதி கண்டு மரணத்தறுவாயிலிருந்தாள். ஒருநாள் அவள் தன் தகப்பனைப் பார்த்து: 'அப்பா, நான் நதியை இன்னொரு தரம் பார்க்க விரும்புகிறேன்' என்றாள். தகப்பன் அவளைப் போர்வையால் நன்றாய் மூடி எடுத்துக்கொண்டுவந்து நதியோரமாய் வைத்தான். கொஞ்சம் நேரம் பொறுத்து தகப்பனைப் பார்த்து: 'அப்பா, நான் மிகவும் பெலவீனமாயிருக்கிறேன், நான் வெகு காலம் இங்கே இருக்க மாட்டேன்; எனக்காக ஜெபம்பண்ணுவீரா?' என்று கேட்டாள். அதற்கு அவன்: 'என் பிரியமான பிள்ளையே, நான் ஜெபம்பண்ணுகிறவனல்லவே, நான் உனக்காக ஜெபம்பண்ணசெய்ய ஏலாது' என்று சொல்லிப் போய்விட்டான். சிறு பெண்ணின் உள்ளம் பயத்தால் நிறைந்தது.

சற்றுநேரம் சென்று தகப்பன் வந்தபோது அவள் அவனைப் பார்த்து: 'அப்பா, நான் முன்னிலும் அதிகப் பெலவீனமாயிருக்கிறேன், நான் மரிப்பது நிச்சயம்; எனக்காக ஜெபம்பண்ணுவீரா?' என்றாள். தகப்பன் பிள்ளையைப் பார்த்து: 'என் பிரியமான பிள்ளையே, என்னால் செய்யக்கூடிய மற்றெந்தக் காரியத்தையும் உனக்காகச் செய்வேன்; நான் ஜெபம் பண்ணுகிறவனல்லவே, நான் உனக்காக ஜெபம்பண்ண ஏலாது' என்றான். அப்போது அந்தப் பெண்: 'ஐயோ, அப்பா, நான் சாகிறேன்; நான் இயேசுவினிடத்திற்குப் போய், என் தகப்பனார் ஜெபம் பண்ணாத மனுஷன் என்றல்லோ சொல்லவேண்டும்' என்றாள். அதைக் கேட்ட தகப்பன் உணர்வடைந்தவனாகி, ஜெபம்பண்ணினான். அப்பால் சீக்கிரத்துக்குள்ளாகப் பிள்ளையின் ஆவி பிரிந்து, தன் தகப்பன் ஜெபம்பண்ணுகிற மனுஷன் என்று அறிவிக்கப் பறந்துபோய்விட்டது. அவன் இன்னம் ஜெபம்பண்ணிக்கொண்டு வருகிறான்.

இதை வாசிக்கும் சிநேகிதியே, நீ ஜெபம்பண்ணுகிறாயா?

THE FOOLISH STAG

மதிகெட்ட மான்

ஒரு மான் ஆற்றில் தண்ணீர் குடிக்கும்படிப் போனது; தண்ணீர் குடிக்கையில் அதின் நிழல் ஜலத்தில் தெரிந்தது. அந்த நிழலில், காணப்பட்ட தன் சாயலை மான் கூர்மையாய்க் கவனித்து, பல கவராய்ப் பிரிந்திருக்கும் தன் கொம்பின் சிறப்பைக் கண்டு சிரித்துக் கொண்டது. ஆற்றிலிருந்து அது வெளியே வந்தபின்பு நிழலில் கண்ட தன் தேக உறுப்புகளெல்லாவற்றையும் மறுபடியும் ஒவ்வொன்றாய் நினைத்துப் பார்த்து: ‘இவ்வளவு அலங்காரமான கொம்புள்ள எனக்கு, கால்தான் அந்தக்கேடாய்ப் போயிற்று; என் அழகிய மேனிக்கு, இப்படியா கால் வாய்க்கவேண்டும்! கொம்புக்கேற்ற காலிருந்தால், பூலோக மிருகங்களொன்றும் எனக்கு இணையாகாது’ என்று சொல்லிக்கொண்டது.

இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கவே, வேட்டைக்காரரும் வேட்டை நாய்களும் வருகிற அரவங்கேட்டு, ஓட்டம்பிடித்தது. அது வேட்டைக்காரருடைய கண்ணுக்குத் தப்பி, விஸ்தாரமான ஒரு வனத்தைக் கடந்து, அப்புறம் இருந்த ஒரு காட்டுக்குள் வந்தது. அக்காட்டிலிருந்த ஒரு முட்செடியில் மானின் கொம்புகள் மாட்டிக் கொண்டதால், அதற்கப்பால் ஓடிப்போகக்கூடாமற்போயிற்று. வேட்டைக்காரர் அடிபார்த்து மானைப் பின்தொடர்ந்தார்கள்; அவர்களுக்குமுன் நாய்கள் மோப்பத்தால், மானைத் தொடர்ந்து கடித்துக் கொன்றன.

3445

மான் சாகும்போது: 'ஐயோ! எனக்கு லாபத்தைத் தருகிறதை நான் எத்தனையோ தரம் பழித்து நஷ்டம் தருகிறதைப் புகழ்ந்தேன். நான் சற்றுநேரத்துக்குமுன் புகழ்ந்த கொம்புகள் மாத்திரமில்லாமல் பழித்த கால்மாத்திரம் இருந்தால், வேடர் என்னைப் பிடிப்பார்களா? வேட்டை நாய்கள் என்னைக் கடிக்குமா? இந்தக் கொம்பல்லவா என்னைக் கொன்றது' என்று புலம்பி மாண்டது.

THE BOY AND THE NOBLEMAN

ஒரு சிறுவனும் பிரபுவும்

அங்கிலேய பிரபு ஒருவர், ஒருநாள் ஒரு பசுவை வாங்கி, அது மறுநாள் தம்மிடம் அனுப்பப்படவேண்டுமென்று கட்டளைகொடுத்திருந்தார். மறுநாள் அதிகாலையில் அந்தப் பிரபு ஒரு சாதாரண மனிதனைப்போல் உடுத்திக்கொண்டு, வெளியே உலாவப்போனர். இங்கிலாந்து தேசத்தில் உற்சவகாலந்தவிர மற்ற சமயத்திலெல்லாம் இராஜகுமாரரும் சாதாரண மனிதரைப்போலவே உடுத்தியிருப்பார்கள். பிரபு வெளியே உலாவிக்கொண்டிருக்கையில், ஒரு சிறுவன் ஒரு பசுமாட்டைத் தமது வீட்டுக்குக் கொண்டுவா வீணுகப் பிரயாசப்படுவதைக் கண்டார். சிறுவன் அந்தப் பிரபுவை யாரென்று அறியாமல், அவரை நோக்கி 'ஐயா, இங்கே வந்து, இந்த மாட்டைப் பிடிக்க எனக்கு உதவிசெய்' என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டான்.

பிரபுவோ சிறுவன் கூப்பிட்டதைக் கவனியாதவர்போல மெதுவாய் நடந்துபோனர்; சிறுவன் அவர் வந்து உதவிசெய்யவேண்டுமென்று விடாமல் கூப்பிட்டுக்கொண்டேயிருந்தான். கடைசியாக அவன் மாட்டைப் பிடித்து அடக்கமுடியாதவனுய், 'ஐயா, இங்கே வந்து எனக்கு உதவிசெய்; எனக்குக் கிடைப்பதில் பாதி உனக்குத் தருவேன்' என்று அதிக வருத்தத்தோடு கூப்பிட்டான். அப்போது பிரபு வந்து அவனுக்கு உதவிசெய்தார்.

பிரபுவும் சிறுவனும் வீட்டுக்குச் சமீபமாய் இருந்த ஒரு சந்தண்டை வந்தபோது, பிரபு, பையனுக்குத் தெரியாமல் வேறொரு வழியாய்த் தமது வீட்டுக்குள் சென்று, வேலைக்காரரின் தலைவனைக் கூப்பிட்டு, அவன் கையில் பத்து ரூபாய் பெறுமான பொன் நாணயம் ஒன்றைக் கொடுத்து, 'பசுமாட்டைக் கொண்டுவந்த அந்தப் பையனிடம் இதைக் கொடு' என்று சொல்லி, வெளியே போய்விட்டார்.

பின்பு அவர் தாம் பையனை விட்டுப்போன சந்தின் மறுமுனையில் நின்றுகொண்டு, அவன் வருவதை எதிர்பார்த்திருந்தார்.

பையனைக் கண்டதும், 'உனக்கு எவ்வளவு கிடைத்தது?' என்றார்.

சிறுவன் '(அரை ரூபாய்க்குச் சரியான) ஒரு ஷில்லிங் எனக்குச் கிடைத்தது; இதோ அதில் பாதி உனக்குக் கொடுக்கிறேன்' என்றான்.

பிரபுவோ 'மெய்யாகவே ஒரு ஷில்லிங்கைப்பார்க்கிலும் அதிகம் உனக்குக் கிடைத்திருக்கவேண்டும்' என்றார்.

பையனோ 'இல்லை, ஐயா, எனக்குக் கிடைத்ததெல்லாம் ஒரு ஷில்லிங்கே யன்றி அதிகமில்லை; ஆனால் அது எனக்கு அதிக கூலியென்று நீ எண்ணுகிறதில்லையா?' என்றான்.

அதற்கு அந்தப் பிரபு 'நான் அதை அதிகம் என்று எண்ணுகிறதில்லை; ஏதோ இதில் பிசகு நடந்திருக்கிறது; எனக்கு அந்தப் பிரபுவை நன்றாய்த் தெரியுமாகையால், நீ என்னோடு வந்தால், அதிகம் வாங்கித்தருவேன்' என்றார்.

அப்போது அவர்கள் இருவரும் பிரபுவின் வீட்டுக்குப் போனார்கள். பிரபு தன் வீட்டு வேலையாட்கள் எல்லாரையும் வரவழைத்து, தனக்குமுன் நிற்கும்படிக் கட்டளையிட்டான்.

பின்பு பிரபு சிறுவனைப் பார்த்து, 'உன்னிடம் ஷில்லிங்கைக் கொடுத்தவனை எனக்குக் காண்பி' என்றார்.

உடனே அந்தச் சிறுவன் வேலைக்காரரின் தலைவனைச் சுட்டிக் காண்பித்து, 'அதோ அந்த மனிதனே எனக்கு அந்த ஷில்லிங்கைக் கொடுத்தான்' என்றான்.

அதே நிமிஷத்தில் அந்த வேலைக்காரரின் தலைவன் தரையில் விழுந்து, தன் குற்றத்தை அறிக்கைசெய்து, பிரபு தன் குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று மிகவும் கெஞ்சினான். பிரபுவோ அவனைச் சிறுவன் கையில் அந்தப் பொன் நாணயத்தைக் கொடுக்கச் செய்து, அவன் உடனே தன் உத்தியோகத்தை விட்டுப் போக வேண்டுமென்று கட்டளையிட்டார்.

அவர் அந்த வேலைக்காரனை நோக்கி, 'உன்னுடைய வஞ்சகமான நடத்தையினால் உன்னுடைய பணத்தையும், உன்னுடைய உத்தியோகத்தையும், உன்னுடைய கீர்த்தியையும் இழந்தாய். நேர்மையான வழியே மகா சிறப்பான வழி என்பதை இன்றோடு கற்றுக்கொள்' என்று சொல்லி, அவனை அனுப்பிவிட்டார்.

சிறுவனுடைய தைரியத்தையும் நேர்மையையும் கண்டு, பிரபு அதிக சந்தோஷமாகி, அவனைப் படிக்கச்செய்து, யோக்கியமுள்ள மனிதனாக்கினார்.

347

GOD KNOWS BEST

தேவன் நலமானது இன்னதென்று அறிவார்

ஒரு பக்தி மிகுத்த அம்மாள் தன்னுடைய தினக்குறிப்புப் புத்தகத்தில் பின் வருவதை எழுதிவைத்தாள் :—

'நான் சிறு பெண்ணாய் இருந்த காலத்தில், எதிர்பாராத விதமாய் எனக்கு ஒரு பெரிய துன்பம் வந்து சம்பவித்தது. அப்போது எங்கள் வீட்டு வைத்தியர் பின்வரும் மெய்யான சம்பவத்தை எனக்குச் சொல்லி, என்னை ஆறுதல்படுத்தினார். அதாவது :—

' '' சில வருஷங்களுக்கு முன்னே ஒரு மனிதன் மரணப் படுக்கையில் இருந்தான். அவனைப் பார்க்கும்படி நான் போனபோது, அவன் பிழைப்பது கூடாத காரியம் என்று எனக்குத் தெளிவாய்த் தெரிந்தது. அதை இரகசியமாய் வைத்திருப்பது சரியல்லவென்று எண்ணி, அவனுடைய பெண்சாதியினிடம் : உன் கணவன் பிழைக்காமல் மரிப்பான் ; இனி அவனுக்கு உயிர் இருக்கும் என்று நம்ப கொஞ்சமும் இடமில்லை என்றேன். இதை அவள் கேட்டதும், மெத்தவும் வியாகுலப்பட்டு: ஐயா, நீர் எப்படியாகிலும் என் புருஷனைப் பிழைப்பூட்டவேண்டும்; அவர் மரித்துப்போனால் நான் என்னுடைய உயிரை மாய்த்துக்கொள்வது நிச்சயம் ; அவர் சாகவே கூடாது ; அவர் எப்படியாகிலும் உயிரோடிருக்கவேண்டும் என்றாள். அவள் சொல்வதைக் கேட்டு நான் ஆச்சரியமடைந்து : எதுவும் தெய்வசித்தத்தின்படியல்லவோ செய்யப்படவேண்டும் ; நாம் கூடும், அல்லது கூடாது என்று சொல்வதில் பயன் என்ன ? உன்னுடைய கணவன் பிழைப்பான் என்கிற நம்பிக்கை எனக்குக் கொஞ்சமும் இல்லை என்றேன். அவளோ நான் என்ன சொல்லியும் கேளாமல்: என் கணவன் எப்படியாகிலும் பிழைக்கத்தான்வேண்டும் ; அவன் சாகவே கூடாது என்று ஒரே பிடிவாதமாய்ப் பேசினாள். நான் ஒன்றும் பேசாமல் அமைதலாய் வெளியே வந்துவிட்டேன்.

' '' மறுநாள் அதிகாலையில் அம்மனிதன் சாகாமல் உயிரோடிருக்கிறான் என்றும், அவனுடைய வியாதி அவனைவிட்டுப் படிப்படியாய் நீங்கிவருகிறது என்றும் கேள்விப்பட்டேன். கடைசியாக அம்மனிதன் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்கினவனாய் முற்றிலும் சுகமுள்ளவனானான்.

' '' பின்பு அவன் சிலகாலம் வேலைசெய்துகொண்டுவருகையில், பொய் கையெழுத்து பண்ணினதற்காகச் சிறைச்சாலையில் அடைக்

கப்பட்டான். அப்போது நான் எதோ அவசர வேலையினிமித்தம் அவன் வீட்டுப் பக்கமாய்ப் போகையில், அவன் பெண்சாதி எனக்கு எதிரில் வந்து நின்று: ஐயோ, ஐயோ, என் புருஷன் சிறைச்சாலையில் போவதைப்பார்க்கிலும் அப்போதே மரித்திருந்தால் நலமாய் இருந்திருக்குமே என்றாள்.

' " இதைக் கேட்டதும், நான் அவளை நோக்கி: நீ தெய்வ சித்தத்துக்குக் கீழமையாமல், தேவன் உன் புருஷனை முந்தி எடுத்துக்கொள்ளச் சித்தமாய் இருந்தபோது, அவன் உயிரோடிருக்கவேண்டும், உயிரோடிருக்கவேண்டும் என்று பிடிவாதமாய் வாதாடினாய். இப்போது அவன் உயிரோடிருந்தது உனக்கு வெட்கமும் துக்கமுமாய் முடிந்தது. இதை அறிந்து, நாம் எப்போதும் நம்மைத் தேவ சித்தத்துக்குக் கீழமையப் பண்ணிக்கொள்ளுகிறது நலம். தேவன் நமக்கு நலமானது இன்னதென்று நன்றாக அறிவார் என்றேன் " என்பதுதான்.

' இவ்வுலகத்தில் நம்மைத் தேவனுக்கு முற்றிலும் ஒப்புக்கொடுப்பது மிகவும் வருத்தமான காரியம்; ஆகிலும் அந்தக் கிருபையை அடைய நாம் பிரயாசப்படுவது அதிக நன்மையை உண்டாக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. தேவனை நம்புகிறவன் எவனோ அவனுடைய இருதயம் சமாதானமுள்ளதாய் இருக்கும். தேவன் தமக்கு நலமானதைச் செய்வார் என்று நாம் பிள்ளைக்கடுத்த விசுவாசத்தோடு நம்பினால், இரவும் பகலும் நம்மில் உண்டாகும் கவலை நீங்கி, வீணான அழுகையும் விசாரமும் நம்மை விட்டு விலகும்.

' நம்முடைய சிறிய கவலைகளையும் பெரிய கவலைகளையும் இயேசுவினிடம் கொண்டுபோய் அவைகளைக் குறித்து அவரிடத்தில் சொல்லுவோமாகில், அவர் மெய்யாகவே நமக்கு உபத்திரவத்தில் ஒத்தாசை செய்யும் தேவன் என்று அறிந்துகொள்வோம். நமது தலையின் மயிர் முதலாய் எண்ணப்பட்டிருக்கிறபடியால், தம்முடைய பிள்ளைகளுக்கு உண்டாகும் துன்பத்தைத் தம்முடைய சித்தத்தின்படியே விலக்குவது அவருக்குக் கூடாத காரியமல்ல.'

REMARKABLE TREES

பேர்பெற்ற மரங்கள்

ஆலமரம் தன்னுடைய கிளைகளிலிருந்து அநேகம் விழுதுகளை விடுவதால் பேர்பெற்றிருக்கிறது; இந்த விழுதுகள் பூமியில் வேரூன்றி, பெரிய அடிமரமாகி, திரும்பவும் வேறு அநேகம் கிளைகளை

349

விடுகின்றன. இவ்விதமாக ஒரு ஆலமரம் சில சமயங்களில் ஒரு நிலத்தின் மிகுதியான பாகத்தைக் கவர்ந்துகொள்ளுகிறது. நருமதை ஆற்றங்கரையிலுள்ள பேர்பெற்ற ஆலமரம் ஒன்றிற்கு ஒரு பெரிய மரத்தையொத்த முந்நூற்று ஐம்பது அடிமரங்கள் உண்டு. அதின் கீழ் ஏறக்குறைய ஏழாயிரம் பேர் சுகமாய்த் தங்கலாம்.

வட அமெரிக்கா தேசத்திலுள்ள **யானை மரமும்**, ஆஸ்திரேலியா தேசத்திலுள்ள **பிசின் மரங்களும்** பருமனால் பேர்பெற்றவை.

பசு மரம் பால்போன்ற ஒருவகை நீரைக் கொடுப்பதால் பேர் பெற்றிருக்கிறது. அது தென் அமெரிக்கா தேசத்திலுள்ள மலைப் பாங்கான இடத்தில் அதிகமாய் வளருகிறது. ஒரு வருஷத்தில் அநேக மாதங்களாய் ஒரு மழைத்துளி முதலாய் அம்மரங்களின் இலைகளில் விழுகிறதில்லை. அதின் கிளைகள் பார்வைக்கு காய்ந்து பட்டுப்போனவைகளைப்போலிருக்கும்; ஆகிலும் அடிமரத்தில் குத்தினால் அதிலிருந்து ஓர்வகை இனிப்பான பால் சுரந்துவரும். சூரியன் உதிக்கையில் பால் அம்மரங்களில் அதிகமாய் இருக்கும். அச்சமயத்தில் எப்பாகங்களிலுமிருந்து சுதேசிகள் மரங்களினடியில் திரளாய் வந்து, ஏனங்களில் பாலைப் பிடித்துக்கொண்டு போவார்கள்.

ஆபிரிக்கா தேசத்தின் உள்நாட்டுப் பாகத்தில் விளையும் **வெண்ணெய் மரம்** பருமனில் அதிகப் பெரிதானதல்ல. கொட்டைப்பாக்கு அவ்வளவு பெரிதாயிருக்கும். அதின் கனியில் ஓர்வித சுகந்த வாசனையும், பருப்பும் இருக்கும். இந்தப் பருப்பை எடுத்து வெயிலில் காயவைத்து, பின்பு தண்ணீரில் வேகவைத்தால், வெண்ணெயைப் போன்ற ஒரு வஸ்து அதிலிருந்து உண்டாகும். அதின் ருசி நன்

றாய் இருப்பதுமன்றி, உப்பு இல்லாமையால் ஒரு வருஷ முழுவதும் கெடாமலுமிருக்கும்.

கோழுப்பு மரம் சீனா தேசத்தில் விளைகிறது. அம்மரத்தின் கனியில் மிருகங்களின் கொழுப்பைப்போன்ற ஒரு வஸ்து உண்டாகிறது. இம்மரத்தைச் சில காலமாய் இந்தியாவிலும் பயிராக்கி வருகிறார்கள்.

சட்டை மரம் தென் அமெரிக்கா தேசத்தில் விளைவாகிறது. அங்கேயுள்ள இந்தியர் அதின் அடிமரத்தை மூன்று அடி நீளமுள்ள துண்டுகளாக வெட்டி, பட்டையை முழுமையும் எடுத்து, தலைக்கு ஒரு துவாரமும் இரண்டு கைகளுக்கும் இரண்டு துவாரங்களுமுள்ள சட்டையாக மாற்றி மாட்டிக்கொள்ளுகிறார்கள்.

தேவனுடைய சிருஷ்டிப்பில் காணப்படும் விநோதங்கள் யாவும் விவரிப்புக்கெட்டாதவைகளாய் இருக்கின்றன.

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1919-௵ அக்டோபர் ௴

1	பு.	2 நாளா.	10.	1—16	11	ச.	2 நாளா.	20.	1—13	21	செ.	2 நாளா.	29.	1—19
2	வி.	,,	12.	1—14	12	ஞா.	,,	20.	14—30	22	பு.	,,	29.	20—36
3	வெ.	,,	13.	1—18	13	தி.	,,	22.	1—12	23	வி.	,,	30.	1—12
4	ச.	,,	14.	1—15	14	செ.	,,	23.	1—11	24	வெ.	,,	30.	13—27
5	ஞா.	,,	15.	1—15	15	பு.	,,	23.	12—21	25	ச.	,,	31.	1—12
6	தி.	,,	16.	1—14	16	வி.	,,	24.	1—14	26	ஞா.	,,	32.	1—16
7	செ.	,,	17.	1—13	17	வெ.	,,	24.	15—25	27	தி.	,,	32.	17—31
8	பு.	,,	18.	1—16	18	ச.	,,	25.	1—10	28	செ.	,,	33.	1—16
9	வி.	,,	18.	17—34	19	ஞா.	,,	26.	11—23	29	பு.	,,	34.	1—13
10	வெ.	,,	19.	1—11	20	தி.	,,	28.	1—15	30	வி.	,,	34.	14—21
										31	வெ.	,,	34.	22—33

C. L. S. PRESS, MADRAS—1919